Hindu tamil - Chennai - 25/02/19



# மகன், மகளை கொலை செய்து இளம்பெண் தற்கொலை

● கணவனின் சந்தேகத்தால் விபரீதம்

■ சென்னை

கணவனின் சந்தேக புத்தியால் மகன், மகளை கொலை செய்துவிட்டு, தாய் தற்கொலை செய்து கொண்டார்.

சென்னை ராயலா நகரில் வாடகை வீட்டில் வசித்து வருபவர் செந்தாமரை (38). சென்னை அண்ணா நகரில் உள்ள செல்போன் கடையில் வேலை செய்து வருகிறார். செந்தாமரையின் மனைவி அபிதா (32). இவர்களுக்கு திருமணமாகி 12 ஆண்டுகள் ஆகிறது. லக்‌ஷ்மி நாராயணன்(12) என்ற மகனும், மகாலட்சுமி (7) என்ற மகளும் உள்ளனர்.

**உருக்கமான கடிதம்**

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை பணிக்கு சென்ற செந்தாமரை இரவு வீட்டுக்கு திரும்பியபோது, மனைவி மற்றும் பிள்ளைகள் தூக்கில் தொங்குவதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். துக்கத்தில் கதறி அழுதார். அவரது சத்தம்கேட்டு அருகே இருந்தவர்கள் உள்ளே சென்று பார்த்தனர். பின்னர் இச்சம்பவம் குறித்து ராயலா நகர் காவல் நிலையத்துக்கு தகவல் அளித்தனர். 3 உடல்களையும் கைப்பற்றிய காவல் துறையினர் பிரேத பரிசோதனைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

வீட்டில் அபிதா எழுதிய உருக்கமான கடிதத்தையும் போலீஸார் கைப்பற்றினர். அதில், 'எனது மரணத்துக்கு யாரும் காரணமில்லை. கணவர் எங்களை சரியாக கவனித்துக் கொள்ளவில்லை. இறந்த பிறகுதான் எங்களின் அருமை அவருக்கு புரியும்' என்று எழுதியுள்ளார்.

முதல்கட்ட விசாரணையில் கணவருடன் ஏற்பட்ட மன வேதனையில்தான் அபிதா, தனது இரண்டு பிள்ளைகளையும் தூக்கிட்டு கொலை செய்துவிட்டு, தானும் தற்கொலை செய்துகொண்டது தெரியவந்துள்ளது. போலீஸார் இதுகுறித்து மேலும் விசாரித்து வருகின்றனர்.

---

வு, பணி மாறுதல்

## ாக்டர்களுக்கு கலந்தாய்வு

■ சென்னை

ுக்கு பதவி உயர்வு, பணியிட ய்வு வரும் 26, 28-ம் தேதிகளில்

வக் கல்லூரி மருத்துவமனை றைகளில் டாக்டர்கள் (பேராசிரி பேராசிரியர்கள்) பணியாற்றி வர்களுக்கு குறிப்பிட்ட கால பதவி உயர்வு மற்றும் பணியிட ாய்வு நடத்தப்பட்டு வந்தது. 7 மாதமாக இந்த கலந்தாய்வு ல. கலந்தாய்வு நடத்தும்படி ல்வி இயக்குநரகத்துக்கு ரிக்கை வைத்து வந்தனர்.

கடந்த 2018-ம் ஆண்டு , 21-ம் தேதிகளில் கலந்தாய்வு ு அறிவிக்கப்பட்டது. ஆனால், ய்வு ஒத்திவைக்கப்படுவதாக து. இதற்கு அரசு டாக்டர்கள் ந்தனர். இந்நிலையில், வரும் தேதிகளில் கலந்தாய்வு நடக்க துவக் கல்வி இயக்குநரகம் வித்துள்ளது. கலந்தாய்வு ரங்கள் www.tnhealth.org என்ற ல் வெளியிடப்பட்டுள்ளது.

---

## நகரில் நடப்பவை

அரசு இசைக் கல்லூரி, கலை பண்பாட்டுத் துறை மிழிசை விழா மற்றும் ஆண்டு விழா' கொண்டாட்டம்: கழக பதிவாளர் ஆர்.சீதாலட்சுமி பங்கேற்பு. கல்லூரி அடையாறு, காலை 10.

மிழாராய்ச்சி நிறுவனம் சார்பில் தமிழ்த்தாய் 71 – பெருவிழா மற்றும் அறக்கட்டளை சொற்பொழிவு, ரியீடு: உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் ராகவன் பங்கேற்பு. நிறுவன வளாகம், தரமணி, 30.

ஷ்ணவா கல்லூரியின் வணிகவியல் துறையின் பொன் ண்டாட்டம்: தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் கல்லூரி வளாகம், அரும்பாக்கம், காலை 10.30.

பல்கலைக்கழக உயிரி தொழில் நுட்பம் சார்பில் உயிரி யமாக்கல் பற்றிய சர்வதேச கருத்தரங்கம்: அண்ணா துணை வேந்தர் எம்.கே.சுரப்பா பங்கேற்பு. டேக் கம், அண்ணா பல்கலைக்கழகம், கிண்டி, காலை 10.

க்த ஜனசபை சார்பில், 'மாணிக்கவாசகரும் ரும்' என்ற தலைப்பில் சொற்பொழிவு: வெள்ளீஸ்வரர் தெற்குமாட வீதி, மயிலாப்பூர், மாலை 6.45.

தாழில் மற்றும் வர்த்தக சபை சார்பில், 'பெண் ளர் விருது 2019' வழங்கும் நிகழ்ச்சி: தமிழக ஆளுநர் ல் புரோஹித் பங்கேற்பு, ஹோட்டல் ஹயாத் ரீஜென்சி, ட்டை, மாலை 5.45.

ட்டுறவு வலைப் பின்னல் மற்றும் இந்திய தேசிய சங்கம் இணைந்து 'பெண்கள் தினவிழா' ட்டம்: எண் 55, பீமசேனா கார்டன் சாலை, மயிலாப்பூர், .

---

**பைமெட்டல் பேரிங்ஸ் லிமிடெட்**

CIN : L29130TN1961PLC004466

(அமால்கமேஷன்ஸ் குழுமத்தின் ஓர் அங்கம்)

ஹுசூர் கார்டன்ஸ், செம்பியம், சென்னை 600 011.

பதிவு பெற்ற அலுவலகம்: "ஹுசூர் கார்டன்ஸ்", செம்பியம், சென்னை 600 011

Phone : (0422) 2221159 வலைத்தளம்: www.bimite.co.in மின்னஞ்சல்: vidhyashankar@bimite.co.in

**அறிவிப்பு**

**பிப்ரவரி 12, 2019** தேதியிடப்பட்ட தபால் வாக்கு அறிவிப்பில் விவரித்துள்ள படி தீர்மானங்களை நிறைவேற்ற கம்பெனி உத்தேசித்துள்ளது என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இது **பிப்ரவரி 15, 2019** தேதியன்று அங்கத்தினர் பதிவேட்டில் கிடைக்கக் கூடிய அனைத்து அங்கத்தினர்களுக்கும் ஒரு தபால் வாக்குப் படிவம் மற்றும் சுய முகவரியிடப்பட்ட ஒரு பிரிபெய்டு பிசினஸ் ரிப்ளை மேலுறையுடன் **பதிவுத் தபால் / கூரியர்** மூலம் அனுப்பப்பட்டுள்ளது. **கம்பெனிகள் சட்டம், 2013இன் படி பிரிவு 108 ன் விதிகள் மற்றும் கம்பெனி (மேலாண்மை – நிர்வாகம்) விதிமுறைகள், 2014 (திருத்தப்பட்டவாறு) உடைய விதிமுறை 22 இல் உள்ளபடி** நேஷனல் டெபாஸிடரிஸ் சர்விஸ் லிமிடெட் National Depositories Services Limited (NSDL) வாயிலாக, கம்பெனி எலக்ட்ரானிக் வாக்குப் பதிவுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறது (e-voting). தபால் வாக்குப் பதிவு அறிவிப்பின் முழு உரை, தபால் வாக்குப் பதிவுப் படிவம், e-voting / தபால் முறை மூலம் வாக்களிப்பதற்கான அறிவுறுத்தல் ஆகியவை கம்பெனியின் வலைத்தளத்தில் கிடைக்கும் www.bimite.co.in.

**பிப்ரவரி 27, 2019 (காலை 9.00)** க்கு e-voting துவங்கி **மார்ச் 28, 2019 (மாலை 5.00)** க்கு முடிவடைகிறது. குறிப்பிட்டுள்ள தேதி மற்றும் நேரத்தைத் தாண்டி E-voting செய்வது அனுமதிக்கப்படாது. இந்த E-voting மற்றும் தபால் வாக்கெடுப்பு செயலாக்கத்திற்கு கம்பெனி, **Dr.C.V. மதுசூதனன், பங்குதாரர், KSR & Co கம்பெனி செக்ரடரிஸ் LLP** அவர்களை ஸ்க்ரூடினைசராக நியமனம் செய்திருக்கிறது. அங்கத்தினர்கள், **மார்ச் 28, 2019** வியாபார நேரத்திற்கு முன்னர் தமது முறையாக பூர்த்தி செய்யப்பட்ட தபால் வாக்குகளை ஸ்க்ரூடினைசரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இந்த தேதிக்குப் பின்னர் பெறப்பட்ட எந்த தபால் வாக்குப் படிவமும், அங்கத்தினர்(கள்) இடமிருந்து எந்த பதிலும் பெறப்படவில்லை என்பதாகக் கருதப்படும்.

**பதிவுத் தபால் / கூரியர்** மூலம் தபால் வாக்குகளைப் பெறாத எந்த ஒரு அங்கத்தினர்களும், அவர்களது மின்னஞ்சல் முகவரிகளை கம்பெனிக்கு / பங்கு பரிமாற்ற முகவர் / டெபாசிடரி பங்கேற்பாளருக்கு சமர்ப்பித்திருந்தால் அவர்களது மின்னஞ்சல் இன்பாக்ஸை பார்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்கொண்டு அவர்கள் கம்பெனி செக்ரட்டரிக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு (அல்லது) **திரு. N. கிருஷ்ணகுமார், இயக்குநர், GNSA இன்ஃபோடெக் பிரைவேட் லிமிடெட், STA டிபார்ட்மெண்ட், 'நெல்சன் சேம்பர்ஸ்', 4 வது மாடி, எண். 115, நெல்சன் மாணிக்கம் ரோடு, அமைந்தகரை, சென்னை 600 029–க்கு** எழுதலாம்.

தரவிறக்கப் பிரிவில் **www.evoting.nsdl** சரிபார்ப்பது தவிர, e-voting / தபால் வாக்களிப்பு தொடர்பான எந்தவொரு கேள்வி / குறைபாட்டுக்கும், **krishnakumar@gnsaindia.com** அல்லது **vidhyashankar@bimite.co.in** (தொடர்பு எண் : **+91 97902 46890**) என்ற மின்னஞ்சல் முகவரியை தொடர்பு கொண்டு கேட்கலாம்.

**நிர்வாக உத்தரவுப்படி**

**K. வித்யாசங்கர்**

**கம்பெனி செக்ரட்டரி**

சென்னை

பிப்ரவரி 25, 2019